வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2322/ஆ2/2025 நாள்: 02.06.2025

பொருள்: பள்ளிக் கல்வி-விளையாட்டுப் போட்டிகள்-2025-26 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/சுயநிதி பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகள்-குறுவட்டம் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்துதல்-சார்பு.

பார்வை:
1. அரசாணை நிலை எண் 175 பள்ளிக் கல்வி ப.க.(7 (2)) துறை நாள்: 25.09.02019
2. சென்னை-06, பள்ளிக் கல்வி இயக்கு நரின் செயல்முறை ந.க.எண்.34753/எம்/எஸ்4/2023 நாள்: 04.07.2023

------------

பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டம் 2025-26 ஆம் கல்வியாண்டில், பள்ளி கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/சுயநிதி நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் U14/U17/U19 வயது பிரிவில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகள் குறுவட்டம் மற்றும் வருவாய் மாவட்ட குடியரசு தின/பாரதியார் தின குழு போட்டிகள், தடகளம் மற்றும் புதிய விளையாட்டுப் போட்டிகளை கீழ்வரும் அறிவுரைகளையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றி நடத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

23.06.2023 அன்று நடைபெற்ற மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் கூட்டத்தில் வேலூர் மாவட்டத்திற்கு 5 குறுவட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுவட்டத்தில் உள்ளடங்கிய ஒன்றியம் மற்றும் மையங்களின் விவரம் கீழ்கண்டவாறு**

| வ எண் | குறுவட்டத்தின் பெயர் | ஒன்றியத்தின் பெயர் | மையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01 | அணைக்கட்டு | அணைக்கட்டு , கணியம்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, விரிஞ்சிபுரம். |
| 02 | வேலூர் | வேலூர் நகர் , வேலூர் புறநகர் | கூனா ப்ரிஸிடென்சி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கொணவட்டம் |
| 03 | காட்பாடி | காட்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, வள்ளிமலை |
| 04 | குடியாத்தம் | கே.வி.குப்பம் , குடியாத்தம் | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நெல்லூர்பேட்டை ,குடியாத்தம். |
| 05 | பேர்ணாம்பட்டு | குடியாத்தம் , பேர்ணாம்பட்டு | அரசு மேல்நிலைப் பள்ளி, அழிஞ்சிகுப்பம். |

**சதுரங்க போட்டிகள் நடைபெறும் ஒன்றிய மையங்களின் விவரம் கீழ்கண்டவாறு**

| வ எண் | ஒன்றியத்தின் பெயர் | மையத்தின் பெயர் |
|---|---|---|
| 01 | அணைக்கட்டு | அரசு மேல்நிலைப் பள்ளி, விரிஞ்சிபுரம். |
| 02 | வேலூர் | கூனாப்ரிஸிடென்சி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கொணவட்டம் |
| 03 | காட்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, வள்ளிமலை |
| 04 | குடியாத்தம் | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நெல்லூர்பேட்டை ,குடியாத்தம். |

| வ எண் | ஒன்றியத்தின் பெயர் | மையத்தின் பெயர் |
|---|---|---|
| 05 | பேர்ணாம்பட்டு | அரசு மேல்நிலைப் பள்ளி, அழிஞ்சிகுப்பம். |
| 06 | கீ.வ.குப்பம் | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கீ.வ.குப்பம். |
| 07 | வேலூர் நகர் | ஊரீசு மேல்நிலைப் பள்ளி, வேலூர் |
| 08 | கணியம்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, பென்னாத்தூர் |

மேற்குறிப்பிட்டுள்ள ஒன்றியங்களைச் சார்ந்த அனைத்து வகை தொடக்க , நடுநிலை , உயர்நிலை , மேல்நிலை , அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் சார்ந்த குறுவட்டப் போட்டிகளில் பங்கேற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>குறுவட்ட போட்டிகள்</u>

அனைத்து பழைய விளையாட்டுகள் , தடகளம் , கடற்கரை கையுந்து பந்து , கேரம், வளையப்பந்து மற்றும் சிலம்பம் குறுவட்ட அளவில் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குறுவட்ட மையங்களின் தலைமையாசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள்/ஆசிரியர்களை நடுவர்களாக நியமனம் செய்து 31.07.2025-ஆம் தேதிக்குள் குறுவட்ட போட்டிகளை நடத்தி முடித்து, வெற்றி பெற்றவர்களின் விவரத்தினை மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரிடம் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>2025-2026 ஆம் கல்வி ஆண்டில் மாணவ/மாணவர்களின் வயது மற்றும் பிரிவு</u>.

அனைத்து நிலை RDG , RDS , BDG , RD/BD போட்டிகள்.

U-11 3முதல்5ஆம் வகுப்பு வரை (01-01-2015)

U-14 6முதல்9ஆம் வகுப்பு வரை (01-01-2012)

U-17 6முதல்12ஆம்வகுப்பு வரை (01-01-2009)

U-19 6முதல்12ஆம் வகுப்பு (01-01-2007)

அனைத்து நிலை SGFI-ஐ விளையாட்டு போட்டிகள்
U – 14 (01-01-2012)
U – 17 (01-01-2009)
U – 19 (01-01-2007)
(வகுப்பின் நிலை தேவையில்லை.)

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் ஒரு பழைய விளையாட்டுப் போட்டி , ஒரு புதிய விளையாட்டுப் போட்டி, ஏதேனும் மூன்று தடகளப் போட்டிகள் மற்றும் இரண்டு தொடரோட்டப் போட்டிகளில் ஒரு கல்வியாண்டில் பங்குபெறலாம்.

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் தான் அனைத்து RDG , BDG , RDS போட்டிகளிலும் பங்கு பெறுதல் வேண்டும். அனைத்து எடை பிரிவு போட்டிகளிலும் நுழைவுப் படிவத்தில் உள்ளவாறு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

குறுவட்ட அளவில் வெற்றி பெற்ற அணியினர் மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற அனுமதிக்கப்படுவார்கள். குறுவட்ட அளவில் தடகளப்போட்டியில் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணாக்கர்கள் மாவட்டங்களில் நடைபெறும் போட்டிக்கு தகுதிபெறுவார். மேலும் தொடர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பிடித்தவர் மட்டும் மாவட்டப் போட்டியில் அனுமதிக்கப்படுவார்கள்.ஒரு போட்டியில் ஒரு மாணவர் அல்லது ஒரு அணி மட்டுமே பங்கு பெறும் போது அவகளுக்கு பதக்கமோ சான்றிதழோ வழுங்கப்படமாட்டாது.

<u>மாவட்ட அளவிலான போட்டிகள்</u>

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து புதிய மற்றும் பழைய விளையாட்டுப் போட்டிகளையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் மூலமாக குழு அமைத்து நடத்தி முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான போட்டிகள் அனைத்தும் உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்தி முடித்திட அறிவுறுத்தப்படுகிறது. அனைத்து வகையான பழைய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தடகள போட்டிகளில் குறுவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் வருவாய் மாவட்ட போட்டிகளில் பங்குபெறுவார்கள்.

நீச்சல், ஸ்குவாஷ், வாள்சண்டை, ஜிம்னாஸ்டிஸ், ஜீடோ, சாலைமிதிவண்டி, சிலம்பம், குத்துச்சண்டை, டேக்வாண்டோ போன்ற புதிய விளையாட்டுகள் போட்டிகள் நேரடியாக வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்படும்.

<u>வயது பிரிவு</u>
U – 14 –– 01.01.2012
U – 17 –– 01.01.2009
U – 19 –– 01.01.2007

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் ஒரு பழைய விளையாட்டு போட்டியிலும் மற்றும் ஒரு புதிய விளையாட்டுப் போட்டியிலும் தடகளப் போட்டியிலும் பங்கு பெறலாம் ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் தான் அனைத்து போட்டிகளிலும் பங்குபெற வேண்டும்.

குறிப்பு: மேற்கண்ட வட்டத்தைச் சார்ந்த அனைத்து வகை பள்ளிகளின் உடற்கல்வி இயக்குநர்கள் நிலை–I & II மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் சார்ந்த வட்ட செயலாளரின் அறிவுரையின்படி ஆலோசனைக் கூட்டத்தில் குறிப்பிடுகின்ற நாட்களில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

04/06/24

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்

பெறுநர்
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்.
வேலூர்.

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர்
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது)
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்
வேலூர்
(தொடர் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது)